# தொழிலாளி

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 இதழ் 27 | மார்ச் 14, 1964 | பக்கங்கள் 10 | விலை சதம் 10



பகிரங்க சொற்பொழிவு

பாரிஸ் கம்யூன் தந்த படிப்பினை

(ஆட்சிபீடத்தைக் கைப்பற்ற தொழிலாளி வர்க்கம் நடத்திய முதல் முயற்சி)

பேச்சாளர்:

தோழர் என். சண்முகதாஸன்

தேசிய அமைப்பாளர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

இடம்: செஞ்சிலுவைச்சங்க மண்டபம், டரட் ரேட்.
காலம்: 18-ந் தேதி புதன்கிழமை
நேரம்: பிற்பகல் 5 மணி.


# சினிமா முதலாளியே பஞ்சப்படி கொடு

## சுப்ரீம் கோர்டு தீர்ப்பு

## எமது சங்கத்தின் பிரமாண்டமான வெற்றி!

**இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் கிளைச் சங்கமான இலங்கை சினிமா, பிலிம் ஸ்டுடியோ தொழிற் சங்கம், கடந்த 9-ந் தேதி மகத்தான வெற்றி பெற்றுள்ளது.**

சினிமாத் தொழிலாளர்களுக்கு அரசாங்க அளவு பஞ்சப்படி தர வேண்டுமென்று சங்கம் முன் வைத்த கோரிக்கை நியாயமானது என்று ஏற்றதுடன், இத் தொழிலாளர்களுக்கு உடனடியாக இப் பஞ்சப்படி வழங்க வேண்டுமென்று சுப்ரீம் கோர்டு தீர்ப்பளித்துள்ளது.

எமது சங்கத்தைச் சேர்ந்த சினிமாஸ் லிமிட்டெட், சிலோன் எண்டர்டைன்மண்ட், லிபர்ட்டி சினிமா ஆகியவற்றைச் சேர்ந்த தொழிலாளர்கள், அரசாங்க அளவு பஞ்சப்படிகோரி 1961-ல் வேலைநிறுத்தம் செய்தனர்.

இக் கோரிக்கை பின்னர் தொழில் கோர்டுக்கு மாற்றப்பட்டது. தொழில் கோர்ட்டில் அரசாங்க அளவு பஞ்சப்படி தொழிலாளர்களுக்குத் தரப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. தொழிலாளர்கள் சார்பில் தோழர் என். சண்முகதாசன் வாதிட்டார்.

சினிமா முதலாளிகள் இத் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர்.

சுப்ரீம் கோர்டும், கடந்த 9-ந் தேதி தொழில் கோர்டு தீர்ப்பை அங்கீகரித்தது.

சுப்ரீம் கோர்ட்டின்தீர்ப்பின் பிரகாரம், சினிமாத் தொழிலாளர்களுக்கு 1962-ஜனவரி-1-ந் தேதி முதல் அரசாங்க பஞ்சப்படி கிடைக்கும்.

இது பற்றி சங்கச்செயலாளர் தோழர் எம்.எம். செனிவரத்தின எமது நிருபருக்கு பேட்டியளித்தபோது, ''இதே சலுகைகளை சிலோன் தியேட்டஸ் தொழிலாளர்களுக்கும்பெற்றுத் தர சங்கம் முயற்சி எடுத்து வருகிறது'' என்றார்.

## இ. போ. ச. தொழிலாளர் வெற்றி

இலங்கை போக்குவரத்துத் தொழிலாளர்கள் இவ்வாரம் மகத்தான வெற்றிபெற்றுள்ளனர். சுாரதிகளுக்கு ரூ 7/50-ம், கண்டக்டர்களுக்கு ரூ 6/-ம், வருடத்திற்கு அதிகரிப்பதென ஆட்சியினர் முடிவு செய்துள்ளனர்.

## 21 கோரிக்கைளை வென்றெடுப்போம்

1. நாளொன்றுக்கு ரூ. 1/- அல்லது மாதம் ஒன்றுக்கு ரூ. 30/- விகிதம் ஊதிய உயர்வு.

2. (அ) எல்லாத் தொழிலாளர்கட்கும் மாதச் சம்பளம்.

(ஆ) எல்லாத் தொழிலாளர்கட்கும்வருடாந்த சம்பள உயர்வு.

3. வாழ்க்கைச் செல

—8-ம் பக்கம் பார்க்க

## மெண்டிஸ் கும்பலின் மாநாடு புஸ்வாணமாயிற்று

### ரூபா ஆயிரம் பத்து, எப்படி கைமாத்து?

மெண்டிஸ் கும்பலின் தொழிற்சங்க மாநாடு சென்ற வாரம் நடைபெற்றது.

கடந்த இரண்டு மாத காலம், ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் கூட்டப்பட்ட மாநாடு முடிவில் புஸ்வாணமாகியது.

மாநாட்டைத்தனித்து நடத்த முடியாமல் சமசமாஜ, எம். ஈ. பி. கட்சியினரை பிச்சை கேட்டு ஆள் திரட்டியது. போதாக் குறைக்கு கூலிக்கு பலர் சேர்க்கப்பட்டனர்.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இம் மாநாட்டு ஊர்வலத்திற்கும், வீதி அலங்காரத்திற்கும் ரூபா பத்தாயிரத்துக்கு மேல் செலவிட்டிருப்பதாக அறிகிறோம். இந்தப் பணம் எங்கிருந்து வந்தது? தொழிற் சங்க வட்டாரத்தில் இது பெரும் கேள்வியை இன்று உருவாக்கியுள்ளது.

மெண்டிஸ் கும்பலின் ஊர்வலம், படுதோல்வி கண்டது. தொழிலாளர்களின் ஊர்வலத்தில், தொழிலாளர்கள் இல்லாதிருந்தது ஒரு வேடிக்கையாகும். அதோடு, கம்யூனிஸ்டுகளை விட ஊர்வலத்தில் சமசமாஜ, எம். ஈ. பி. கட்சியினர் கலந்துகொண்டது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

ஊர்வலத்தில் திரிபுவாதத் தலைவர்கள் போட்ட கோஷம், அவர்கள் மத்தியில் மார்க்ஸிஸம் செத்துவிட்டதைக் காட்டியது. 'மெண்டிஸ் குட்டி சிங்கக் குட்டிகள்;' 'சண் குட்டிகள், தமிழ் குட்டிகள்'' (மெண்டிஸ் பெட்டவ் சிங்க பெட்டவ், சண பெட்டவ், தெமல பெட்டவ்) என்று அவர்கள் போட்டகோஷம், மார்க்ஸிஸத்திற்கே அவமானமாகும். திரிபுவாதிகளின் இனவெறி ஊர்வல கோஷங்கள் மூலம் நேரடியாகவே அம்பலமாயின.

ஓட்டல் பேக்கரி தொழிற்சங்கம், கள்ளுத் தொழிலாளர் சங்கம் போன்றவைகளின் பதாகைகளின்கீழ் இத்துறைகளில் வேலைசெய்பவர்கள் எவருமே ஊர்வலத்தில் இல்லாதிருந்தது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

## நேயர்களுக்கு

மின்சார எஞ்சினியர்கள் சென்ற வாரம் வேலை நிறுத்தம் செய்த காரணத்தால் ஏற்பட்ட மின்சாரத் தடையினால், சென்ற வார 'தொழிலாளி' வெளிவரவில்லை.

இவ்விதழில்சேர்க்கப்பட்டுள்ள 3, 4, 5, 6-ம் பக்கங்கள், சென்ற இதலுக்குறியவை.

சென்ற இதழ் வெளி வராமைக்கு வருந்துகிறோம்.

நிர்வாகி

## தலையங்கம்

# போராட்ட பாடம்

இலங்கைப் போக்குவரத்துச் சபை டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட்டிருப்பது சிறந்த வெற்றியாகும்.

சென்ற ஆண்டில் நடைபெற்ற மகத்தான, வரலாற்றுப் புகழ்மிக்க இ. போ. ச. வேலை நிறுத்தத்தின் விளைவு இது.

சம்பள அதிகரிப்பு, சென்ற ஆண்டு வேலை நிறுத்தத்தின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்ருக இருந்தது. அன்று, தொழிலாளிகளிடையேயுள்ள சில கயவர்களின் காட்டிக் கொடுப்பு—கழுத்தறுப்பு சதிகளினல் தொழிலாளர்கள்வெற்றிபெறமுடியாது போயிற்று.

சென்ற வேலைநிறுத்தத்தின் போது, இ. போ. ச. தொழிலாளர்களின் கோரிக்கைகள் மிகவும் நியாயமானது என்று பிரதமர் கூறினர். ஆனல், அவர் இக் கோரிக்கைகளை தரு முன்னர், சீர்குலைவாளர்கள், திரிபுவாத பீட்டர் கெனமன்—விக்கிரமசிங்கா கோஷ்டியினர் வேலைநிறுத்தத்தைக் காட்டிக் கொடுக்க முற்பட்டனர். முடிவு, ஆட்சியினர் தமக்கு சாதகமாக அதைப் பாவித்து, வேலைநிறுத்தத்தை முறியடித்தனர்.

சீர்குலைவுக் கும்பல் அன்று செய்த மோசமான சதியை பல தொழிலாளர்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்; மன்னிக்கவும் மாட்டார்கள்.

போராடாமல் தொழிலாளர்கள், உழைக்கும் மக்கள் தமது கோரிக்கைகளை வென்றெடுத்ததற்கு எங்குமே சான்றில்லை. உறுதியான, சளையராத போராட்டங்களின்மூலமே தொழிலாளர்கள் சகல வெற்றிகளையும் பெற்றுள்ளார்கள்.

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் வெற்றியும், போராட்டத்தின் விளைவாக வந்ததே. இ. போ. ச தொழிலாளர்களிடையே போராட்ட உணர்வும், ஐக்கியப் பிணைப்பும் இல்லாதிருந்தால் ஆட்சியாளர் இந்த கோரிக்கைகளை தந்திருக்கவே மாட்டார்கள்.

சென்ற ஆண்டில் இ. போ. ச தொழிலாளர்கள் நடத்தியவீரோதாரப் போரரட்டத்தை, ஆட்சியாளரையும், முதலாளி மார் களையும் மிஞ்சிவிட்ட ரீதியில் இனவெறியையும், ஜாதி வெறியையும் அவிழ்த்து விட்டு, தோழர் சண்முகதாசன் மீது சகல பழி பாவத்தையும் போட்டு வேலை நிறுத்தத்தை சீர்குலைக்க, சின்னுபின்னப் படுத்த முனைந்தனர். ஆனல் சீர்குலைவாளர்களுக்குத் தோல்வியே கிட்டியது.

ஜாதி வெறியையும், இன வெறியையும் உதைத்துத் தள்ளி விட்டு பஸ் தொழிலாளர்கள் சகலரும் தோழர் சண்முகதாஸனின் தலைமையில் இறுதிவரை போராட்டம் நடாத்தினர். அன்று அவர்கள் காட்டிய ஐக்கியம் இன்று வெற்றிதந்தது.

பஸ் தொழிலாளர்களிடையே ஐக்கியமும், ஒற்றுமையும் மேலும் மேலும் உருவாகவும், சாதனையீட்டவும் இவ்வெற்றி வழி கோலும் என எதிர்பார்க்கிறோம்.

# இலங்கையின் சுதந்திரத்திற்கு ஆபத்து

இந்திய ராணுவ விமானத்தின் அத்துமீறிய ஊடுருவல் குறித்து சென்ற வார 'கம்கருவா'வின் முதல் பக்கச் செய்தியின் பூரண தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.

## இந்திய உளவு விமானத்தின் அத்துமீறிய தலையீடு

கடந்த 24-2-64-ல் இரவு இந்திய விமானப் படைக்குச் சொந்தமான விமானமொன்று, பலாத்காரமாக ரத்மலானை விமான நிலையத்தில் இறங்குவதற்குரிய பின்னணி இரகசியம்தான் என்ன?

சீனப் பிரதமரின் இலங்கை விஜயத்திற்கு ஒன்றரை நாட்களுக்கு முன் இச் சம்பவம் நடைபெற்றுள்ளதால், இது சம்பந்தப்பட்ட சந்தேகங்கள் மேலும் மேலும் வளர்ந்துள்ளன.

இப்போதைக்கு தரப்பட்டுள்ள விளக்கத்தின் பிரகாரம் நடைபெற்றுள்ள சம்பவங்கள் இதுவாகும். திங்கள் இரவு திடீரென முன்னறிவித்தலின்றி அல்லது எவ்வித அனுமதியுமின்றி விமானமொன்று ரத்மலானை விமான நிலையத்தில் இறங்கியுள்ளது. விமான நிலைய அதிகாரிகள் இதைப் பற்றி விசாரிக்க செல்லுமுன்பே இன்னுமொரு விமானம் ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. பிறகு அவ் விமானங்கள் இந்திய விமானப்படை பிரிவினருக்குச் சொந்தமான விமானங்கள் என்று அதிகாரிகள் தெரிந்து கொண்டனர்.

இவ் விமானங்கள் இரண்டும் இலங்கைக்கு சமீபத்திலுள்ள இந்துமா சமுத்திரத்தில் நிறுத்தப்பட்டுள்ள விமானங்களைக் கொண்ட யுத்தக் கப்பலொன்றிலிருந்துவந்ததாகசெய்திகள் வந்துள்ளன. முன் ரத்மலானையில் இறங்கும் பொழுது அதனுடைய டயர் ரோதையில் ஏற்பட்ட சேதத்தை நீக்குமுகமாக கூடுதலாக டயர் ரோதைகளை ஏற்றிக் கொண்டு இவ் யுத்தக் கப்பலிலிருந்து மறுமொரு விமானம் செவ்வாயன்று ரத்மலானையில் இறங்கியது. அன்றே அவ்விரு விமானங்களும் மறுபடியும் பறந்து சென்றன.

### உளவு வேலை

இந்த விமானங்கள் மேற்கூறிய யுத்தக் கப்பலிலிருந்து வந்ததாகவும், இவைகள் உளவு வேலைகளில் ஈடுபடும் விமானங்கள் என்றும் இந்தியத் தூதுவராலயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இவைகள் சம்பந்தப்பட்ட பின்னணி இரகசியங்கள் என்ன என்பதை பலர் அறிய ஆவலுள்ளவராக இருக்கின்றனர்.

எம்மைப் பொறுத்த வரையில், இதில் எந்தவித இரகசியமும் கிடையாது. இந்திய விமானமொன்று இலங்கையினது பிரதேச எல்லையின் சுயாதீனத்தை வெளிப்படையாகவே மீறியுள்ளது, எமதுநாட்டின் மீது பலாத்காரமாக அத்து மீறிய செயலாகும். சுருக்கிக் கூறுவதாயிருந்தால், இது எமது நாட்டின் மீது செய்யப்பட்ட ஆக்ரமிப்பாகும்.

### சட்ட விதி

எந்த நாட்டினதும் பிரஜைகளை ஏற்றிச் செல்லும் சிவில் விமானங்கள் கூட ஒரு நாட்டின்மேல் பறப்பதற்கு முன் (இறங்குவதற்கு அல்ல அந்த நாட்டின் ஆகாயத்தைத் தாண்டிச் செல்ல) அந்த நாட்டின் அனுமதி முன் கூட்டியே பெற வேண்டும். அத்தகைய அனுமதி பெறுமல் அதை மீறிச் செல்லும் எந்த விமானத்தையும் வெடி வைப்பதற்கோ அல்லது சுட்டு வீழ்த்துவதற்கோ எந்த நாட்டிற்கும் நிரந்தரமாயுள்ள சட்ட விதியாகும்.

நிலைமை இப்படியிருக்க, இந்திய விமானம் எமது ஆகாயத்தை மீறிவருவதற்குரிய காரணம் என்ன? உண்மையாகவே, அத்துமீறி செய்யப்பட்ட ஆக்கிரமிப்பல்லவா இது? முதலாவதாக, மின்சார இயக்குதலின் கோளாறு நிமித்தம் ரத்மலானையில் இறங்க நேர்ந்தது என்று இவர்கள் கூறினர்கள். சரி, அப்படியாயினும் கூட இலங்கையின் மிகவும் சமீபத்திலுள்ள அந்தக் கப்பலுக்கே திரும்பியிருக்க முடியும். அதற்காவது மன்னிப்பு உண்டென்போம்.

### ஆக்கிரமிப்பு

எந்தவித கோளாறுமின்றி வந்த இரண்டாவது விமானம் வட்டமிடுவதற்குரிய காரணம் என்ன? எங்களுடைய விமான தளத்தை சுற்றி வட்டமிடுவதற்கு அதற்கு எந்தவித உரிமையும் கிடையாது. இச் செயலானது அப்பட்டமான ஆக்கிரமிப்பாகும்.

இரண்டாவது பிரச்சினை என்னவெனில், தினசரி நடவடிக்கையாக இவ் விமானங்கள் உளவு வேலை பார்ப்பதாக இந்திய தூதுவரகமே ஒப்புக் கொண்டுள்ளது. இலங்கையினுள்ளோ அதைச் சுற்றியுள்ள பிரதேசத்திலோ உளவு பார்ப்பதற்குரிய அவசியம் இப்பொழுது என்ன வந்துவிட்டது. இதற்குரிய தேவைதான் என்ன? ஒருநாடு மற்றுமொரு நாட்டில் உளவு வேலை பார்ப்பதுநாட்டிற்கு ஏதாவது பயமுறுத்தலோ அல்லது ஆக்கிரமிப்புக்குரியஅபாயங்கள் இருந்தால் மாத்திரமேயாகும்!

எங்களது இந்த சிறிய நாட்டிலிருந்து அவ்வளவு பெரிய இந்திய நாட்டை ஆக்கிரமிக்கப் போகிறோம் என்று கூறக் கூடிய எந்தவித அத்தாட்சியையாவது சமர்ப்பிக்க முடியுமா? இல்லை. இதிலிருந்து தெரிவதென்ன? எமது இச் சிறிய நாட்டை என்ருவது ஒருநாள் விழுங்கி விடுவதற்குரிய கழுகுப் பார்வையில்

## ஆக்கிரமிப்பு எங்கிருந்து?

இந்தியா கண்ணோட்டம் விடுவதுதான் இதிலிருந்து நிரூபிக்கப்படுகிறது. எமக்குப் பிடிபட்ட முதல் தடவை இதுவேயாகும். ஆனல், இதற்கு முன் இப்படி எத்தனை தடவை விமானங்கள் எம் தாயகத்தினுள் பிரவேசித்துள்ளனவோ நாம் அறியோம். இது சிந்திக்கவேண்டிய விஷயமாகும்.

மூன்ருவது பிரச்சினை, இவ் விமானத்தைப் பறக்க விட்ட யுத்தக்கப்பல் இலங்கைக்கருகில் இருந்துகொண்டு என்ன செய்கிறது? யாருக்கு விரோமாகப் பறக்க விடப்பட்ட விமானமிது?

### பயங்கர சூழ்நிலை

தென் கிழக்காசியாவை சுரண்டுவதற்கு மிகவும் அக்கறையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்திய பிற்போக்கு முதலாளித்துவம் சமீபத்தில் அந்தமான் தீவில் ஒரு பலம்வாய்ந்த கடற்படைத் தளத்தை அமைத்துக் கொண்டதோடு, அமெரிக்க 7-வது கடற் படையை தென் கிழக்காசிய கடலில் ரோந்து சுற்ற விட்ட நடவடிக்கைகளும், இந்திய விமானங்கள் இலங்கையின் எல்லைகளை மீறி ஆக்கிரமித்தல்களும், எல்லாமே ஒரு பயங்கரச் சூழ் நிலையை சிருஷ்டி செய்யும் சம்பவங்களாகும்.

இலங்கையின்மேல் இன்னுமொரு காலனி ஆதிக்கத்தை ஏற்படுத்த முனையும் எங்களது பரம எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியமும், எங்களது பொருளாதாரத்தை அப்பிப்பிடித்துள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், எதிர் காலத்தில் எங்களது நாட்டை ஒரு காலனியாக ஆக்கிக் கொள்வதற்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இந்திய ஆதிக்கக் காரர்களுமாக ஒன்று சேர்ந்து, கைச்சாத்திட்டுக் கொண்டு நடத்திவரும் யுத்தப் பயிற்சியின் முதல் கட்டம்தானு இது? இதன் முடிவுதான் என்ன?

### தேசாபிமானிகளே

ஈழத்திருநாட்டின் தேசாபிமானிகளே! சற்று சிந்தித்துப் பார்த்து செயலாற்றுவது உங்கள் இன்றியமையாத கடமையாகும்.

இப்பொழுது நமது நாட்டில் செய்யப்பட்டதைப் போல் அத்துமீறல், சுயாதீனத்தை தகர்த்தெறிந்து உள் புகுதல் போன்ற பலாத்கார நடவடிக்கைகள் போன்றவைகளை பல தடவை செய்த போது மேலும் பொறுத்துக்கொள்ள முடியாமல் தங்களது பாரம்பரிய பிரதேசத்தை பாதுகாத்துக் கொள்ளுமுகமாக மக்கள் சீனக் குடியரசு தற்காப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட சமயம், சீன மக்கள் குடியரசை ஆக்கிரமிப்பாளன் என்று ஒதுக்கித் தள்ளப்பட்ட பிரச்சாரசூருவளியில் வரிசைக் கிரமமாக நின்றவர்கள் யார்? ஏகாதிபத்தியவாதிகளிலிருந்து யூ. என். பி.க்காரர்கள் உட்பட கத்தோலிக்க தலைமைப் பீடம், சமஷ்டிக் கட்சிக் காரர்கள் இலங்கையின் தலைலாமாக்களினூடே வந்த குருஷ்சோவ் வாதிகள், நேருவை பின்பற்றுபவர்கள் (பிலிப் குணவர்த்தன) போன்ற சந்தர்ப்பவாதிகள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து சீனத்திற்கு விரோதமாக ஒரு ஐக்கிய முன்னணி அமைத்ததை நீங்கள் அறிவீர்கள். இதன் பிரதிபலன்தான் சீனப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்யும் போது சுவர்களில் கவிகள் எழுதி ஒட்டி, இவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தார்கள்.

### யார் நண்பன்?

ஆக்கிரமிப்பானர்கள் யார்? சோஷலிஸ நாடான சீன மக்கள் அரசாங்கமா? அல்லது விரிவடைந்துவரும் இந்திய முதலாளித்துவமா? எமது நாட்டிற்கு சமாதான நேசபாவத்தையும், தோழமையுடன் கூடிய அந்நியோன்ய உதவியையும்,சமாதான சகஜீவனத்திற்குரிய பஞ்ச சீலக் கொள்கையின் தூதுவர்களையும் ஏற்கொண்டு வந்த சீன விமானமா? அல்லது, யுத்தவெறி கொண்டு எதிர்ப்பையும், சுரண்டலையும் பலாத்காரத்தையும் பயமுறுத்தலையும் ஏற்றுமதி செய்துகொண்டு வந்த இந்திய விமானமா?

தமிழில்:

**மரியதாஸன்**

---

அப்புத்தளையில்

## தோழர் சண்ணுக்கு பிரமாண்ட வரவேற்பு!

"அப்புத்தளை மாரியப்பாவின் கோட்டையாகி விட்டது. சி. டி. யூ. எப்புக்கு அங்கு இடமில்லை'' என்று, புளுகுணி தேசாபிமானிக் கும்பல் சில வாரங்களுக்குமுன் பறை கொட்டியது.

சென்ற 26-ந் தேதி சி. டி. யூ. எப். பொதுச் செயலாளர் தோழர் சண்முகதாசனுக்கு அப்புத்தளை தோட்டத் தொழிலாளர்கள் அளித்த மகத்தான வரவேற்பு, பொய்யர்களுக்கு சரியான பாடம் கற்பித்துள்ளது.

அன்று புதிய காரியாலயத்தில் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர்கள் கூட்டத்தில் 50-க்கு மேற்பட்ட தோட்டத் தலைவர்களும், காரியதரிசிகளும், இளைஞர்களும் திரளாகக் கலந்துகொண்டார்கள்.

நாங்கள் மாரியப்பாவின் பக்கம் செல்லத் தயாராக இல்லையென்றும், செங்கொடி சங்கத்தில் பூரண நம்பிக்கை உண்டென்றும் அங்கு கூடியிருந்தவர்கள் ஒருமுகமாக தோழர் சண்முகதாசனிடம் தெரிவித்தார்கள்.

எதிர்காலத்தில் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றி ஊவா மாகாணப் பொதுக் காரியதரிசி தோழர் கரவைக் கந்தசாமி எடுத்துக் கூறினர்.

# புரட்சி பற்றி லெனின்

**தோழர் லெனின் எழுதிய "ருஷ்யப் புரட்சி" என்ற கட்டுரையின் சில பகுதிகளை இங்கு தந்துள்ளோம்.**

அக்டோபர் 21-ம் திகதி நான் இதை எழுதுகிறேன். 22-ம் திகதி பெற்ருேகிராட் தோழருக்கு இது கிடைக்குமோ தெரியாது. வட பகுதி சோவியத்துகளின் காங்கிரஸ் அக்டோபர் 23-ம் திகதி நடக்கவிருப்பதால், இது காலம் கடந்து கிடைக்கக்கூடும். இருந்தாலும் பெற்ருேகிருட் நகரத்தின் தொழிலாளர்களினதும், போர் வீரர்களினதும் கிளர்ச்சி அண்மையில் நடக்கும் என்ற நம்பிக்கையில் ஓர் பார்வையாளனின் ஆலோசனையாக நான் இதைக் கூறுகிறேன்.

அரசியல் அதிகாரம் யாவும் சோவியத்துகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பது தெளிவு. புரட்சிகரப் பாட்டாளி வர்க்க ஆதிக்கத்திற்கு பொதுவாக உலகில் உள்ள உழைப்பாளிகளினதும் சுரண்டப்படுவர்களினதும் மனப்பூர்மான ஆதரவும் உணர்ச்சிமிக்க ஒத்துழைப்பும் நிச்சயம் கிடைக்கும் என்பதும் குறிப்பாக ருஷ்ய விவசாயிகளின் பரிபூரண ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்பது, போல்ஷிவிக்குகளினுல் மறுக்கமுடியாது உண்மையாகிவிட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த உண்மைகளைப் பற்றி தெளிவுபடுத்தவேண்டிய அவசியம் இல்லை.

எல்லாத் தோழர்களுக்கும் தெளிவாக இல்லாத பின்வரும் பிரச்சினை பற்றி தெளிவுபடுத்தல் அவசியம். இன்று சோவியத்துகளுக்கு அதிகாரம் ஏற்படுவது என்பது இன்று ஆயுதம் தாங்கிய போராட்டம் என்று ஆகிவிட்டது. இது தவிர்க்கமுடியாது என்றபோதிலும் எல்லோரும் இதில் கூடிய கவனம் செலுத்துவதாகத்தெரியவில்லை.

இந்த வேளையில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தைக் கைவிடுதல் போல்ஷிவிக்குகளின் முக்கிய கோஷத்தை (எல்லா அதிகாரமும் சோவியத்துக்கே) கைவிடுதலாகும்.

ஆயுதம் தாங்கிய போராட்டம், அரசியல் போராட்டத்தின் ஓர் தனிப்பட்ட விசேஷ அம்சம். விசேஷ கடமைகளை அனுஷ்டிக்க வேண்டும். இதில் கவனம் செலுத்த வேண்டியதவசியம்.

''ஆயுதம் தாங்கிய போராட்டம் யுத்தத்தைப்போல் தந்திரங்கள் நிறைந்தது'' என்று கார்ல் மார்க்ஸ் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். இந்த தந்திரங்களின் முக்கிய கடமைகளை கார்ல் மார்க்ஸ் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

1. ஆயுதப் புரட்சியுடன் விளையாடாதீர். தொடங்கி விட்டால் முடிவு காணும்வரை ஓயாதீர்கள்.
2. குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட தருணத்தில் முழு சக்தியையும் பயன்படுத்தவேண்டும். இல்லாவிடில், தயார் செய்யும் வசதிகள் உள்ள எதிரிகள், புரட்சிவாதிகளை முறியடித்துவிடுவர்.
3. ஆயுதப் புரட்சி ஆரம்பித்த பின், பெரும் விடாமுயற்சியுடன் செயல்புரியவேண்டும். தவருது முன்னேறவேண்டும் பின்வாங்குவது ஆயுதப் புரட்சிகளுக்குப் படுகுழியையே தோண்டும்.
4. எதிரியைக் காத்திராப்பிரகாரமாகத் தாக்கவேண்டும். எதிரியின், சக்திகள் தனிப்பட்டிருக்கும் வேளையில் தாக்கவேண்டும்.
5. சிறியனவாக இருந்தாலும் ஒவ்வொரு நாளும் வெற்றிகள் அடைய நாம் முயலவேண்டும். (ஒரு பட்டினத்தை எடுத்துக்கொண்டால், மணித்தியாலயத்திற் கொரு முறை வெற்றிகள் ஈட்ட முயலவேண்டும் என்று சொல்லலாம்) எப்படியும், நம்பிக்கையைக் குறையவிடாது கூட்டிக் கொண்டிருக்கவேண்டும்.

எல்லாப் புரட்சிகளின் படிப்பினைகளையும் ஆராய்ந்த மார்க்ஸ், ஆயுதப் புரட்சிகளை, டான்ரன் கூறியதுபோல் ''ஆயுதப் புரட்சி, இதுவரை எமக்குத் தெரிந்த புரட்சி முறைகளில் மிகச் சிறந்தது. துணிச்சல் மிக்கது என்று கூறியுள்ளார்.

1917 அக்டோபர், ருஷ்யாவைப் பொறுத்தவரை ஏகோபித்த தாக்குதலாக ஒரே தடவையில், முடிந்தளவு சடுதியாக, பெற்ருேகிருடில், உள்ளேயும் வெளியிலிருந்தும் நடத்தப்படல் வேண்டும். பின்லாந்தில் உள்ள, தொழிலாளர்கள், றெவல், குறஸ்ரற் ஆகிய கடற்படைத் தாக்குதல், ஒருபுறம், எமது கொசாக்ஸ்சின் ஒரு பகுதியான 'லென்டின்'படை 15,000,20,000 பூர்சுவா படைகளைக் கட்டுப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் ஒரே வேளையில் நடைபெறவேண்டும்.

எமது முக்கிய பகுதிகளான, கடற்படை, தொழிலாளர்கள், காலாட்படை ஆகியவையின் நடவடிக்கைகள் கூடியவரை இணைக்கப்பட்டு தொலைபேசிக் கந்தோர், தந்திக் கந்தோர், புகையிரதஸ்தானங்கள், குறிப்பாக பாலங்கள் கைப்பற்றப்படவேண்டும். எமது ''ஆக்கிரமிப்புப்படை'', இளம் தொழிலாளர்கள், சிறந்த கடற்படையாளர்கள், ஆகிய மிக விடாமுயற்சியுள்ள பகுதிகள் சிறு சிறு அணிகளாகத் திரட்டப்பட்டு, எல்லா தாக்குதல்களிலும் பங்குகொள்ளச் செய்யவேண்டும். உதாரணமாக, பெற்ருேகிருடை முற்றுகை செய்து, கடற்படை, தொழிலாளர், படைவீரர் ஆகியவற்றினுல் கைப்பற்றுவதற்கு திடகாத்திரமும், செயல் திறனும் விடாமுயற்சியும் வேண்டும்.

எதிரிகளின் துருப்புகளை முற்றுகை செய்ய சிறந்த தொழிலாளர், துவக்குகள், குண்டுகள் உடன் தயாரிக்கப்படவேண்டும். இவர்களின் இலட்சியம் ''எதிரியைப் போகவிடுவதிலும் பார்க்க நாம் செத்துமடிவதுமேல்'' என்றிருக்க வேண்டும்.

தாக்குதல் தீர்மானிக்கப்பட்டால் தலைவர்கள் வெற்றிகரமாக மார்க் சும் டான்ரனும் வகுத்துள்ள கோட்பாடுகளை அமுல் நடத்துவர் என்று நம்புகிறேன்.

ருஷ்யப் புரட்சியும், உலகப் புரட்சியும் வெற்றியடைவது இரண்டு, மூன்று நாள் போராட்டத்தைப் பொறுத்திருக்கிறது.

# துறைமுக ஊழல்களுக்கு காரணம் யார்?

சென்ற இதழ்களில் துறைமுகத்தில் நடக்கும் ஊழல்களில் சிலவற்றை விமர்சித்தோம். இங்கு பெருமளவில் ஊழல்கள் நடப்பதற்கு நிர்வாகிகளே காரணமாகியுள்ளனர். பொலிஸ் சுங்க அதிகாரிகளின் கண் காணிப்பிலே பொருள்கள் பல கடத்தப்படுகின்றன. இலஞ்சம் என்பது சாதாரணமான வழக்கமாகவுள்ளது.

துறைமுகத்தில் சுங்கப்பகுதி ஒருபுறம், அதிகாரசபை ஒரு புறம், கூட்டுஸ்தாபனம் ஒரு புறம் தனித்தனியே இயங்குகின்றன. இதனுல் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பில்லை. இதனுலும் பல நஷ்டங்கள் ஏற்படுகின்றன.

அண்மையில் இம்மூன்று துறைகளையும் இணைத்து ஓர் அதிகாரத்திற்குள் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதற்கு முதற் படியாக முன்னை நாள் சுங்க அதிகாரி எம். சந்திரசோம, துறைமுக அதிகாரியாகவும், கூட்டுத்தாபன அதிகாரியாகவும் பதவி ஏற்றுள்ளார். லஞ்ச ஊழல்களைத் தடுக்கவும், அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் நஷ்டமில்லாமல் துறைமுகத்தை நடத்துவதற்கான சில முயற்சிகளை அவர் எடுத்து வருவது வரவேற்கத்தக்கதே. இரவு நேரங்களில் முக்கியமான கேட்டுகள் தவிர ஏனையவைகளைப் பூட்டிவைப்பதெனவும், அதிகாரிகள், பொருள் கடத்தலைத் தடுக்க தீவிர முயற்சி எடுக்க வேண்டும் எனவும் அவர் ஆணைகள் பிறப்பித்துள்ளார்.

ஆனுல், துறைமுகம் சரியான முறையில் இயங்குவதற்கு தனி ஒரு நபரின் முயற்சியினுல் மட்டும் சாதிக்க முடியாது. பெருச்சாளிகள் முக்கிய பதவிகளிலிருந்து நீக்கப்பட்டு, நேர்மையும் கடமை உணர்ச்சியும் உள்ளவர்கள் பொறுப்புள்ள பதவிகளில் அமர்த்தப்பட வேண்டும். அரசாங்கத்தின் சில பகுதிகளின் ஆதரவைப் பெற்ற சிலரும், இம் முயற்சிகளுக்குத் தடையாய் உள்ளனர். துறைமுகத் தொழிலாளர்களைவும், தொழிற் சங்கங்களையும், தனது நம்பிக்கைக்குப் பாத்திரமாக்கிக் கொண்டு செயலாற்ற முற்பட்டால் லஞ்ச ஊழல்கள் எவ்வளவோ அம்பலப்படுத்தப்படும். தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவி மடுத்து, அவர்களின் ஒத்துழைப்பைப் பெற்ருல் துறைமுகத்தில் வேலை திறமையாகவும், நட்டமில்லாமலும் நடைபெற முடியும். தனி ஒருவரின் முயற்சிகளை நாம் பாராட்டும் அதே வேளையில் ஊழல் நிறைந்த நிர்வாக இயந்திரத்தை மாற்றியமைத்து, தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் செயலாற்றுவதனுல் மட்டும் தான் பயனடைய முடியும் என்பதை நாம் வற்புறுத்த விரும்புகிறோம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# வந்தெம் பாதை அடைவீரே!

—திருகோணமலை வில்வராஜ்—

புரட்சி என்ற சொல்கேட்டுப்
புழுவாய்த் துடிக்கும் வீணர்களே
வரட்சிப் பாதை தனிலேநீர்
வாழ்நாள் கழிக்க முயலுவதேன்?
எழுட்சிக் கருத்தை எடுத்தெறியும்
எத்தர் உலகில் ஒருநாளும்
செழித்து வாழ்ந்த சரிதமில்லை
செகத்தோர் இதனை உணர்கையிலே
உழுத்துப் போன கருத்தொன்றை
உளறித் திரிவது மேனேதான்?

ஜனநா யகத்தின் பேராலே
பணநா யகங்கள் ஆள்வதையே
இதுநாள் வரையில் நாம் கண்டோம்
இனியும் பொறுமைக் கிடமுண்டோ?
'சனிவாய்' கிடந்த நாமெல்லாம்
சரிதம் மாற்றப் புறப்பட்டோம்
அநியா யத்தின் அடிதனையே
அறுக்கத் துணிந்தோம் அறிவீரோ
வர்க்கப் புரட்சி வருமுன்னே
வந்தெம் பாதை அடைவீரே!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★

★ தரமான தாள்கள்

★ அச்சுக்கு நேர்த்தியானவை

★ பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள் அச்சடிக்க சிறந்த தாள்கள்

உடனடியாக விண்ணப்பியுங்கள்:

இலங்கை டிரேட் எக்ஸ்சேஞ்

மெர்க்கண்டைல் ஹவுஸ், 56/6, ராணி வீதி, கோட்டை.

கடந்த 19-2-63-ல், டவுன்ஹால் மண்டபத்தில் நடைபெற்ற பிரமாண்ட கூட்டத்தில் தோழர்

# கம்யூனிஸ்ட் கட்சியும்-இலங்கை

## புதுப் பொறுப்பேற்று புரட்சி

“சமாதானமான அல்லது சமாதானமற்றபாதையில்சோஷலிஸத்தை நோக்கிச்செல்ல, மக்களைஆகர்சித்து, வழிநடத்த புரட்சிகரமான, நேர்மையான, துணிகரமான இடதுசாரி ஐக்கியம் அவசியம். இத்தகைய ஓர் ஐக்கியத்தை ஏற்படுத்த நாம் சளையாது போராடுவோம். சந்தர்ப்பவாதிகள் திசை தடுமாறிய தால் தமது பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒன்று சேர்ந்தால் மட்டும், ஐக்கியம் ஏற்பட்டதாக அர்த்மில்லை’’ என்று, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரேமலால் குமாரசிரி, 19-2-64-ல் ‘‘கம்யூனிஸ்ட் கட்சியும், இலங்கைப் புரட்சியும்’’ என்ற பொருள்பற்றி புதிய நகரசபை மண்டபத்தில் சொற்பொழிவாற்றிய போது குறிப்பிட்டார்.

### கைவிட முடியாது

அவர் தொடர்ந்து பேசுகையில், ‘‘சோஷலிஸத்தை நிர்மாணிப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அவசியம்’’ என்றார். மேலும் பேசுகையில், ‘‘எந்த ஒரு நாட்டிலாவது, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில்லாது சோஷலிஸம் நிர்மாணிக்கப் படவில்லை. இதற்கு இலங்கை மட்டும் விதிவிலக்காகாது. ஆனல், கம்யூனிஸ்ட் கட்சி இலங்கை மக்களை சோஷலிஸப் பாதையில் எடுத்துச் செல்ல, மார்க்ஸிஸ-லெனினிஸ தத்துவத்தின் அடிப்படையில், இலங்கையின்யதார்த்த சூழ் நிலைக்கேற்ப செயல்படல் வேண்டும். உலகு முழுவதும் ஏற்றுக்கொண்ட இந்த உண்மைகளைப் புறக்கணிக்கவோ, திரித்துக் கூறவோ, அல்லது கைவிடவோ முடியாது’’ என்றார்.

மேலும் பேசும்போது அவர் கூறியதாவது: ‘‘கம்யூனிஸ்ட் கட்சியின் கடந்தகாலத் தலைமை இக்கோட்பாடுகளைக் கைவிட்டதின் காரணமாக அண்மையில்நடந்த கட்சியின் 7வது தேசிய காங்கிரஸில், கென்மன் கும்பல் தலைமைப் பீடத்திலிருந்து விரட்டப்பட்டு; மார்க்ஸிஸ-லெனினிஸத்தில் விஸ்வாசமுள்ள புதிய தலைமை தேர்ந்தெடுக்கப்பட்டது.

### சாதிப்பது எங்ஙனம்?

‘‘என்றோ ஒரு நாள் காலை நித்திரைவிட்டெழுந்ததும் புரட்சி வந்துவிடும், என்பது போல் கம்யூனிஸ்டுகளைப் பார்த்து திரிபுவாதிகள் கூறுவது ஒரு வழக்கமாக உள்ளது. புரட்சி எப்போ என்றும் இவர்கள் கேட்க முன்வந்துள்ளனர்.

எந்த ஒரு நாட்டிலும், எதுவித ஆயத்தமுமின்றி புரட்சி தாஞக வந்ததில்லை. இலங்கையிலும் அப்படி நடக்கப் போவதில்லை. முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள முரண்பாடுகளைச் சரியான முறையில் அணுகி, புரட்சிக்கான சூழ்நிலையை உருவாக்குவது புரட்சியின் தலைவஞன கம்யூனிஸ்ட் கட்சியின் கடமை. குரும்பை, தேங்காயாக முத்துவதுபோல் அல்ல, புரட்சிகர சூழ்நிலை வளர்ச்சியடைவது. யதார்த்தமான சூழ்நிலை ஒரு புறமிருக்க, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் மக்களின் உணர்வும், திடமான நம்பிக்கையும் உருவாஞல்தான் புரட்சிக்கான சூழ்நிலை உருவாக முடியும். அத்தகை சூழ்நிலை உருவாகும் போது அதைப் பயன்படுத்த கம்யூனிஸ்ட் கட்சி தயாராக இருத்தல் வேண்டும். ஐந்து வருடத்திற்கொருமுறை முதலாளித்துவ பாராளுமன்றத் தேர்தலுக்குத் தயார் செய்வதன் மூலம் இதைச் சாதிக்க முடியாது. விடா முயற்சியுடன் கஷ்டப்பட்டு, நாட்டின் புரட்சிகர இயக்கங்களை அணி திரட்டுவதன் மூலமே இதைச் சாதிக்க முடியும்.

‘‘புரட்சியில் முக்கிய அம்சம் அரசாங்க ஆதிக்கமாகும். எல்லா நாடுகளிலும் இந்த உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலும் அப்படியே, தொழிலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை எப்படிக் கைப்பற்றுவது என்பதுதான் கேள்வி. தொழிலாளி வர்க்கம் பாராளுமன்றத் தேர்தலில் அதிகப்படி ஆசனங்களைப் பெற்றதும், முதலாளி வர்க்கம், தாஞக அதிகாரத்தைக் கைவிடுமா? அல்லது முதலாளித்துவ அரசாங்க இயந்திரத்தை உடைத்தெறிந்து ஆட்சியை நாம் கைப்பற்றுவதா? அல்லது முதலாளி வர்க்கம் எம்மை, அடித்து நொருக்க விட்டுக் கொடுப்பதா?

### சமாதானமா பலாத்காரமா?

‘‘சோஷலிஸப் பாதையை நிர்ணயிக்க அத்தியாவசியமான இப் பிரச்சினைக்கு பதில் காண வேண்டுமாயின், சமாதானமா, பலாத்காரமா என்ற கேள்விக்கும் பதிலளிக்கத்தான் வேண்டும்.

‘‘சமாதானத்தை விரும்புவதில் கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் வேறெவருக்கும் சளைத்தவர்கள் அல்ல. சமாதானமாக சோஷலிஸத்தை



மக்கள் சீனத்தின் மாபெரும் தலைவர், பிரதமர் சூ என்-லாய் அண்மையில் இலங்கை, ரத்மலானை விமான நிலையத்தில் தோழர் பிரேமலால் குமாரசிரியுடன் கை குலுக்கும் காட்சி.

## பொதுச்செயலாளர் பிரே

அடைவதுதான் எமது விருப்பம். ஆனல், இதைத் தீர்மாணிக்கும் பொறுப்பு எம்மை மட்டும் சார்ந்ததல்ல. ஆளும் வர்க்கம் தாஞகவேபதவியைத் துறந்ததாக சரித்திரத்தில் ஒரு உதாணந்தானும் இல்லை. நிலப் பிரபுத்துவ வர்க்கத்தை, முதலாளி வர்க்கம் தோற்கடித்த முதலாளித்துவப் புரட்சியிலும் கூட இந்த நிலை ஏற்பட்டதில்லை. ஆதலால், சோஷலிஸப் புரட்சி நடக்கும் போது, மிகவும் அடிப்படையான, சரித்திர ரீதியான, புரட்சிகரமான சமுதாய மாற்றம் ஏற்படும் போது, வர்க்க பேதமுள்ள சமுதாயம், வர்க்க பேதமற்ற சமுதாயமாக மாறும்போது ஆளும் வர்க்கம், சமாதானமாக விட்டுக் கொடுத்து பதவியிலிருந்து விலகி விடும் என்று நம்புவது, முட்டாள் தனமானதும், அபாயகரமானதுமாகும். மாருக, ஆளும் வர்க்கம் தனது சலுகைகளைப் பாதுகாப்பதற்காக எப்போதும்மே பலாத்காரத்தை உபயோகித்துள்ளது. இதன் காரணமாக தொழிலாளி வர்க்கம் தனது உரிமைகளை வென்றெடுக்க பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது’’ என்றார்.

### இலங்கையின் புரட்சி

இலங்கையின் சோஷலிஸப் புரட்சியைப் பற்றிப் பேசிய தோழர் குமாரசிரி, சமாதான மாற்றத்தை முன்வைப்பவர்கள் ஒரே வர்க்கத்தின் ஒரு பிரிவினரிடமிருந்து அதே வர்க்கத்தின் மறு பிரிவினர் ஆட்சியைக் கைப்பற்றுவது பற்றிப் பேசுகிறார்களா, அல்லது ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்திடமிருந்து அதிகாரத்தைப் பறித்தெடுப்பது பற்றிப் பேசுகிறார்களா என்று கேட்டார். முதலாளித்துவ விளையாட்டுகளில் ஈடுபடுவதற்குப் பதில், சோஷலிஸத்தை ஏற்படுத்துவதாஞல் பலாத்காரமாக ஆட்சியைக் கைப்பற்றுவது அவசியம் என்றார்.

‘‘பாராளுமன்றத்தைப் பொறுத்தமட்டில் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில், பாராளுமன்றப் போராட்டத்தை தொழிலாளி வர்க்கம் கடைப்பிடிக்கும் போராட்ட முறைகளில் ஒன்ருகத்தான் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. அவசியமேற்படும் போது இத்துறையில் போராட மறுப்பது தவறு. ஆனல், பாராளுமன்றம் என்ருல் என்ன என்பதை கம்யூனிஸ்டுகள் தெளிவாக புரிந்துகொள்ளுவதுடன், மக்களுக்கும் தெளிவுபடுத்தவேண்டும். இதன் வர்க்க சொரூபத்தை நாம் தெளிவாவாகப் புரிந்து கொள்ளல் வேண்டும். முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தை அழகுபடுத்தி மக்களை மயங்கவைக்கும் ஓர் ஆபரணம்தான் பாராளுமன்றம். ஒரு பாராளுமன்ற நாட்டிலே அரசாங்கத்தின் உண்மையான நடவடிக்கைகள், பாராளுமன்றத்திற்கு வெளியில் அதிகாரிகளிஞலும் அரசாங்க இலாக்காக்களிஞலும், போலிஸ், இராணுவம் போன்றவைகளிஞலும் நடத்தப்படுகிறது என லெனின் குறிப்பிட்டுள்ளார் என்றார்.

### பாராளுமன்ற முறை

தோழர் பிரேமலால் தொடர்ந்து பேசுகையில், ‘‘ஒரு

ல் தோழர் பிரேமலால் குமாரசிரி நிகழ்த்திய பேருரையின் சுருக்கத்தை இங்கு தந்துள்ளோம்

# ங்கையின் புரட்சிக் கடமைகளும்

கொலை பாதகமான சீர்குலை வாளர்கள் என்று தோழர் குமாரசிரி'' குறிப்பிட்டார். தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும், திரிபுவாதிகள் தான் ''இன்றைய, மிகப்பெ

## ுரட்சி வழிநடப்போம்

எப்போ தை உப தன் கார வர்க்கம் வென்றெ தை உப நிர்ப்பந் ான்றூர்.

### ன்

ாஷலிஸப் பேசிய மாதான வைப்பவர் ின் ஒரு ுதே வர்க் ர் ஆட் து பற்றிப் , அல் மற்றெரு அதிகா டுப்பது ா என்று ித்துவ படுவதற் லிஸத்தை பலாத் க் தைப் ான்றூர்.

த்தைப் குறிப் ங்களில், பாராட் வர்க்கம் ாராட்ட கத்தான் ந்துகிறது.

புதிய வர்க்கம் பாராளுமன்றத்தில் அதிகப்படி ஆசனங்களைப் பெற்றதும், முதலாளி வர்க்கத்தின் இப் பிரதிநிதிகள், புதிய வர்க்கத்திற்கு நேர்மையாகப் பணி புரியுமா அல்லது இவர்களை பூரணமாக விலக்கி, அதன் இடத்தில், புதிய வர்க்கத்தின்—தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைப் பேணக்கூடிய ஓர் அரசாங்க இயந்திரத்தை ஏற்படுத்த வேண்டுமா என்ற கேள்வியை எல்லா உண்மையான புரட்சிவாதிகளும் மனதில் கொள்ள வேண்டும்.

பாராளுமன்ற முனையில் போராடுவதைகம்யூனிஸ்டுகள் கைவிடமாட்டார்கள். ஆனால் இந்த முனைதான், ஒரே ஒரு முனை என்றோ, எல்லாக் காலங்களிலும் முக்கியமான முனையென்றோ உள்ள மயக்கத்தை நாம் பூரணமாகக் கண்டிக்கிறோம். முதலாளித்துவப் பாராளுமன்றத்தைப் பாவித்து முதலாளித்துவ சமுதாயத்தின் ஊழல்களை அம்பலப்படுத்தவேண்டும். முதலாளித்துவ பாராளுமன்றத்தின் கேலிக் கூத்தை அம்பலப்படுத்தவேண்டும். ஆனால் முதலாளித்துவ பாராளுமன்றத்தை நம்பி, சோஷலிஸத்தை நிர்மாணிக்க முடியும் என்ற மயக்கத்தை மட்டும் ஏற்படுத்தக் கூடாது.

''அத்துடன், எப்போதும், பாராளுமன்றத்திலுள்ள

நடக்கக்கூடியது என்னவென்றால், பாராளுமன்ற அதிகாரத்தை அடைந்துள்ள முதலாளி வர்க்கம் கம்யூனிஸ்டுகள் பாராளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றுவதை—தடை செய்வதற்காக அரசியல் சட்டத்தை மாற்றவும், தேர்தல் சட்டத்தை மாற்றவும், தேர்தலையே இல்லாமல் செய்யவும் பாராளுமன்றத்தைக் கலைக்கவும். கம்யூனிஸ்ட் கட்சியை தடை செய்யவும் பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கைதுசெய்யவும் நடவடிக்கைகள் எடுப்பதாகும். இதற்கு ஆதாரமாக அண்மை சரித்திரம் பல உதாரணங்களை எமக்குத் தந்துள்ளது—கேரளத்தில், கிழக்குப் பாகிஸ்தானில், தென் கொரியாவில், பிரான்சில் நடந்தவை இதற்குச் சான்று.

### உதாரணம் இல்லை

''தொழிலாளிவர்க்கம், தேர்தல்களில் மட்டும் நம்பிக்கை வைத்து ஆளும் வர்க்கமாக மாற முடியுமா என்பதுதான், தெளிவான, சுலபமான கேள்வி. சரித்திரத்தில் இதுவரை இப்படி நடந்ததாக ஒரு உதாரணமும் இல்லை. இப்படி நடக்கக்கூடிய சாத்தியங்கள் எந்த நாட்டிலாவது இருப்பதாகத் தெரியவில்லை'' என்று தோழர் குமாரசிரி குறிப்பிட்டார்.

''பாராளுமன்றம் மூலம் சோஷலிஸத்தை நிறுவுவோம்

### இலங்கையில் மக்கள் கொரிய கலாச்சார தூதுக்குழு



சென்ற வாரம் மக்கள் கொரிய நல்லெண்ண கலாச்சார தூதுகோஷ்டியொன்று இலங்கை வந்து சேர்ந்தது.
இலங்கை- மக்கள்-கொரிய நட்புறவுச்சங்கத்தின் அழைப்பை ஏற்று இலங்கைவந்த தூதுக் குழுவை, இலங்கைமக்கள் கொரிய நட்புறவுச் சங்கப் பிரமுகர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்றனர். இத்தூதுக்குழு இலங்கையில் மூன்று வாரகாலம் தங்கும்.

## ர் பிரேமலால் குமாரசிரி முழக்கம்

ாது இத் மறுப்பது ராளுமன் என்பதை தளிவாக ன், மக் த்தவேண் க சொரு ாவாகப் வண்டும். வாதிகா மக்களை ஆபர ுமன்றம். நாட் ன் உண் கைகள், வெளி ும் அர ிளுலும், ம் போன் த்தப்படு ன் குறிப் .

### ற

ல் தொ , ''ஒரு

தொழிலாளி வர்க்கப் பிரதிநிதிகள், ஏமாற்றத்திற்கும், ஊழல்களுக்கும் ஆளாகி முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளாகவும் மாறக்கூடிய அபாயம் உண்டு என்பதை, மக்களுக்கு எச்சரிக்கை செய்யவேண்டும். முதலாளி வர்க்கம், பலமுறை தமது நன்மையைக் கருதி தொழிலாளி வர்க்கப் பிரதிநிதிகளை கெடுத்து பயனற்றவர்களாக்கும் நோக்குடன் பாராளுமன்றத்தில் அனுமதிப்பதுண்டு. இப்பேற்பட்ட ஓர் நிலை இலங்கையிலும் ஏற்பட்டுள்ளதா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்த்தல் அவசியம். நேர்மையான தேர்தல் சட்டங்களும் ஜனநாயகமான நிலைமைகளும் இருந்தால், தொழிலாளி வர்க்கம் பாராளுமன்றத்தில் அதிகப்படியான ஆசனங்களைப் பெறலாம் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் கூடுதலாக

என்று கூறுபவர்களைப் பார்த்து ஒரே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். நீங்கள் பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றுவோம் என்று கூறும்போது, தொழிலாளி வர்க்கப் பிரதிநிதிகளைக் குறிப்பிடுகிறீர்களா? அல்லது தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் எனக் கூறும் முதலாளி வர்க்கப் பிரதிநிதிகளைக் குறிப்பிடுகிறீர்களா'' என்று தோழர் பிரேமலால் வினவினார்.

### ஐக்கியம்

மேலும் அவர் கூறினார்: ''பாராளுமன்றத்தில் அதிகப்படியான ஆசனங்களைப் பெறுவதானாலும், குறிப்பிட்ட நிலைமைகள் இருப்பது அவசியம். முதலாவது தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியம், இந்த ஐக்கியம் கொள்கை ரீதியிலும், ஸ்தாபன ரீதியிலும், அரசியல் துறையிலும், தொழிற்சங்கத் துறையிலும் இருத்தல் அவசியம். இரண்டாவதாக தொழிலாளிகட்கும், விவசாயிகட்குமிடையே திடமான ஐக்கியம் இருத்தல் வேண்டும். மூன்றாவதாக, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையை ஏற்று ஆதரிக்கும் பரந்த வெகுஜன இயக்கம் உருவாகவேண்டும்.

இத்தகைய நிலைமை இலங்கையில் உருவாகியுள்ளதா? இல்லாவிடில் இந்த நிலைமையை உருவாக்க நாம் என்ன செய்ய வேண்டும்? மார்க்ஸிஸ-லெனினிஸப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாததால் சில நபர்கள் போட்டிச் சங்கங்கள் அமைப்பதன் மூலம், தொழிலாளர் ஐக்கியத்தை வளர்க்க முடியாது. விவசாயிகளின் பெயரில், தொழிலாளர் போராட்டங்களை எதிர்ப்பதன் மூலமோ காட்டிக் கொடுப்பதன் மூலமோ, தொழிலாளி-விவசாயி ஐக்கியத்தை உருவாக்க முடியாது. தொழிலாளிகளின் போராட்டங்களைக் கைவிடுவதால் விவசாயிகளை வென்றெடுக்க முடியாது. விவசாயிகளை அணி திரட்டி அவர்களின் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி, அவர்களின் கோரிக்கைகளை வென்றெடுப்பதன் மூலம் தான் விவசாயிகளை வென்றெடுக்க முடியும்.

வாக்காளர்களாகிய பொது மக்களின் ஆதரவைப் பெற்று தேர்தல்களில் வெற்றியெறுவதனுலும், பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட போராட்டங்கள்மிகவும் முக்கியம்.

''இலங்கையின் சரித்திரத்தில் அண்மையில் நடந்த இரண்டு சிறந்த உதாரணங்கள் உள்ளன. 1947-ம் வருடப் பொது வேலைநிறுத்தத்தால் உந்தப்படாவிடில் 1947-ம் ஆண்டுத் தேர்தலில், இடதுசாரிக் கட்சிகள் அதிகமான ஆசனங்களில் வெற்றிபெற்றிருக்க முடியாது. 1956-ம் ஆண்டு ஏற்பட்ட மக்களின் வெற்றி 1953-ம் ஆண்டின் முதலாளித்துவ அரசாங்கத்தை உலுப்பிய வீரம் மிகுந்த ஹர்த்தால் நடந்திரா விட்டால் வெறும் கனவாகப் போயிருக்கும்.

''இடதுசாரி இயக்கத்தின் திரிபுவாத சீர்திருத்தவாத, சந்தர்ப்பவாதத் தலைவர்கள் இந்த வீரமிகு போராட்டங்களை மறந்துபோயிருக்கலாம். ஆனால் இப்போராட்டங்களை நடத்திய தொழிலாளிவர்க்கம் மறவாது திரியுவாதத் தலைமையை அகற்றியதால். கம்யூனிஸ்ட் கட்சியும் இதை மறவாது.

''இலங்கையின் புரட்சி வெற்றிபெற மிக அவசியமானதும் தவிர்க்க முடியாததும் கொள்கை ரீதியான நேர்மையான இடதுசாரி ஐக்கியம். இந்த அவசியத்தை உணர்ந்த மார்க்ஸிஸ- லெனினிஸ்டுகளாகிய நாம் தகர்க்க முடியாத. உறுதியான ஐக்கியத்தை உருவாக்க முயன்று வருகிறோம்'' என்றூர் குமாரசிரி.

தொடர்ந்து பேசுகையில் கெனமன்-விக்கிரசிங்கா கும்பல் தன்னை இடதுசாரி ஐக்கியத்தின் விரோதி என்று குற்றம் சாட்டுவதற்குப் பதிலளிக்கையில், ''ஐக்கியத்தைப் பற்றி இடைவிடாது கூச்சல் போடும் இவர்கள் தான் மிகவும், ரிய சீர்குலைவாளர்கள்'' என்பது நிரூபணமாகியுள்ளது. சர்வதேச ரீதியில் இவர்கள், சோஷலிஸ முகாமின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவித்தனர், சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தின் ஐக்கியத்தைச் சீர்குலைத்தனர், பல நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பிளவு படுத்தினர். இங்கு கெனமன்-விக்கிரசிங்கா திரிபுவாதக் கும்பல் கம்யூனிஸ்டுகளின் பல வருட தியாக உழைப்பினுல் கட்டிவளர்த்த கம்யூனிஸ்ட் கட்சியை, வாலிபர் இயக்கத்தை, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் ஆகியவற்றைப் பிளவுபடுத்தினர். இது போதாதென்று, தொழிற் சாலைகளில் சங்கங்களைப் பிளவு படுத்துகின்றனர். வெட்கமின்றி, வகுப்பு வாதத்தையும், காடைத்தனத்தையும் இலஞ்சத்தையும் பாவித்து, தொழிலாளர்களை ஒருவருக்குமேல் ஒருவரை தூண்டி விடுகின்றனர். நமது கட்சியைச் சீர்குலைத்த இந்த நபர்கள், தமது வெளிநாட்டு திரிபுவாதிகள், குறிப்பிட்ட ஓர் நிலையில் குறிப்பிட்ட அரசாங்கத்தின் ஓர் பகுதியை பாதுகாக்க வேண்டும் என்று விரும்பினுல் இடதுசாரி ஐக்கிய முன்னணியையும் சீர்குலைக்கத்தயங்கமாட்டார்கள்.

''இந்த சந்தர்ப்பவாத துரோகிகள், சீர்குலைவாளர்கள், எமது ஐக்கியத்தைக் குலைக்கலாம், அல்லது ஐக்கியப்பட்ட இயக்கத்திலிருந்தே ஓடிமறையலாம். ஆனுல், உண்மையான கம்யூனிஸ்டுகளாகிய நாம், ஐக்கியத்தின் கொடியை உயர்த்திப் பிடித்து இலங்கைப் புரட்சியின் வெற்றிப் பாதையில் செல்வோம்'' என்று கூறி முடித்தார்.

# வளரும் வாலிபர் இயக்கம்

## தோட்டத் தொண்டர் படைகளை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கங்களாக்க முடிவு

### தலவாக்கொல்லை வாலிபர்கள் கூட்டத்தில் தீர்மானம்

இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்க (செங்கொடிச் சங்க) தலவாக்கொல்லை மாவட்டம், அதனுடைய சகல தோட்டங்களிலும் தற்போது இருந்துவரும் காங்கிரஸ் காலத்தில் அமைக்கப்பட்டதொண்டர்படைகளை கலைத்துவிட்டு, ஒவ்வொரு தோட்டத்திலும் வாலிபர் சங்கத்தை அமைக்க முடிவு செய்துள்ளது. இதற்கு முன்னோடியாக கடந்த 23-2-64 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு மாவட்டக் காரியாலயத்தில், சகலதோட்டங்களிலுமுள்ள தொண்டர் காப்டன்கள் மற்றும் முன்னணி வாலிபத் தோழர்களைக் கொண்ட கூட்டமொன்று நடைபெற்றது,

இக் கூட்டத்தில் தலவாக்கொல்லை மாவட்டத்திலுள்ள சகல தோட்டங்களிலும் தற்போது இருந்து வரும் தொண்டர் படைகள் கலைக்கப்பட்டு அவை கம்யூனிஸ்ட் வாலிபர் கங்கங்களாக மாற்றப்பட வேண்டுமென்று வாழமலை தோட்டத்தைச் சேர்ந்து தோழர் எம். எஸ். கிட்ணன் கொண்டுவந்த பிரேரணை, ராசாப்பத்தனை தோட்டத்தைச் சேர்ந்த தோழர் கந்தனால் ஆமோதிக்கப்பட்டு, சுமார் 70 க்கும் அதிகமான வாலிபர்களின் பலத்த கரகோஷத்துக்கிடையே ஏகமனதாக நிறைவேறியது.

சகல தோட்டங்களிலுமுள்ள தொண்டர் படைகள் கலைக்கப்பட்டு, அவ்விடங்களில் வாலிபர் சங்கங்களை அமைத்து 29-4-64-க்குள் ஒவ்வொரு தோட்டமும் தனது வாலிபர் சங்க உறுப்பினர் விபரங்களை மாவட்டக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கூட்டத்தில் பங்குபற்றிய தொண்டர் காப்டன்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

சகல தோட்டங்களிலும் வாலிபர் சங்கங்கள் அமைக்கப்பட்டதும் கொழும்பிலுள்ள கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத் தலைவர்களை வரவழைத்து கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க தலவாக்கொல்லைக் கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தை ஆரம்பித்து உரை நிகழ்த்திய செங்கொடிச் சங்க தலவாக்கொல்லை மாவட்டப் பிரதிநிதி தோழர் ரொசாரியே, ''ஒவ்வொரு வாலிபர் சங்கமும் ஒவ்வொரு வாலிபர் படையாக மாறி, எதிர்வரும் செங்கொடிச் சங்க வருடாந்த மாநாட்டை எதிரிகள் பார்த்து வியக்கும் வண்ணம் சிறப்பான முறையில் நடத்த ஆவன செய்ய வேண்டுமென்று'' கேட்டு கூட்டத்தை முடித்தார்.

(ந. நி)

● வேக்கந்தை

### வாலிபர் சங்க புது நிர்வாகிகள்

கடந்த 22-2-64 - ல் நடைபெற்ற வேக்கந்தை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் கீழ் காண்பவர்கள் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: எம். அமரதாஸ, தலைவர்; டபிள்யூ. பீ. சயிபூதீன், உப-தலைவர் ஏ. குமாரகே, செயலாளர்; எச். எல். சரணபால, உப-செயலாளர்: எம். காலித், பொருளாளர்: ஆர். பெரேரா உட்பட தோழர்கள் டபிளயூ. பி. பொடிமஹாத்தெயா, எஸ். ரங்கமணி, டபிள்யூ. ஏ. பொடி அப்புஹாமி, டி.டி குணதாஸ, டி. எம் சரீப்தீன், எஸ். நெல்சன் ஆகியோர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

★

● மட்டக்குளி

### திரிபுகளுக்கு கண்டனம்

மட்டக்குளி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க கூட்டம் கடந்த 2-2-64-ல் நடைபெற்றபோது திரிபுவாதிகளைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தலைவராக தோழர் தயாஹேவாவும், பொருளாளராக தோழர் விக்ரமரத்னவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

★

● கொம்பனி வீதி

### திரிபுவாத முதலாளித்துவத்தை எதிர்ப்போம்

''என்றைக்கும் மார்க்ஸிஸ-லெனினிஸ தத்துவங்களை உயர்த்திப்பிடித்து அவ்வழியில் செல்லும் நம் நாட்டு வாலிபத் தோழர்கள் முதலாளித்துவத்துக்கு இட்டுச் செல்லும் நவீன திரிபுவாதிகளுக்கு விரோதமாகப் போராடவேண்டும்'' என்று, அண்மையில் நலடபெற்ற கொம்பனி வீதி கம்யூனிஸ்ட் வாலிபர்சங்கக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய மேற்படிச் சங்கத்தின் தலைவர் தோழர் ஜெயசூரியா கூறினார்.

★

● ஹட்டன்

### வாலிபர் படை

அண்மையில் நடைபெற்ற ஹட்டன் தோட்டத்து வாலிபர்களின் கூட்டத்தில், புதிய வாலிபர் சங்கமொன்று அமைக்கப்பட்டது. கீழ்வரும் உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப் பட்டனர்.

தலைவர்: கே.பி. கோபால், தொண்டர் படைத் தலைவர்: அ. தம்பு, செயலாளர்-பொருளாளர்; ஜே. சுப்பையா, உதவி செயலாளர்: டி. பெருமாள். காரியக்கமிட்டி அங்கத்தவர்கள்: அ. சின்னையா, எஸ். செல்லசாமி, கே. தங்கையா, எம். சதாசியம், ஆர். சுப்பையா, அ. சவரிமுத்து, பி. கணேசன், எஸ். குப்புசாமி, ஆர். சிவனையா, எம். மூக்கன், எம். பிச்சை, எல். நாராயணன்.

# துரோகக் கும்பலின் அண்டப் புளுகு

## காங்கேசன்துறையில் உங்கள் வாலிபர் சங்கம் எங்கே?

''காங்கேசன்துறை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தைப் பற்றி சில வாரங்களுக்கு முன்பு, அண்டப் புளுகு பத்திரிகையான தேசாபிமானியில் ஆகாசப் புளுகுச் செய்தியொன்று வந்திருந்தது. காங்கேசன்துறை கம்யூனிஸ்ட் வாலிபர்சங்கக் கூட்டம் நடந்ததாகவும், செயலாளரான தோழர் மாலெஸ் விலக்கப்பட்டதாகவும் அச் செய்தி கூறுகிறது. தலைவரால் (இப்பேர்வழிதான் தோழர் சண்முகதாசனைப் பற்றி சாக்கடை பிரச்சாரம் செய்து இருமுறை மூக்குடைபட்டவர்) ஒழுங்கு செய்யப்பட்ட அக் கூட்டத்திற்கான அறிவித்தல் செயலாளருக்கு 12 மணித்தியாலத்திற்கு முன்புதான் கிடைத்தது. இணைச் செயலாளருக்கும் மற்றும் பெரும்பான்மையான அங்கத்தவர்களுக்கும் கிடைக்கவில்லை. செயலாளர், இணைச் செயலாளர் உட்பட மிகப் பெரும்பான்மை அங்கத்தவர்கள் பங்கு பற்றாத— ஐந்து ஆறு அநாமதேயங்களுடன் 'மேடைப் புலியும்' 'பம்பாய் புரட்சியும்' சேர்ந்து நடத்திய கூட்டத்தில்தான் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. எனவே அங்கத்தவர்கள் இல்லாத கூட்டத்தில் எடுக்கப்பட்ட போலித் தீர்மானங்களை அங்கத்தவர்களாகிய நாம் முற்றாக நிராகரிக்கிறோம்.'' இவ்வாறு 16-2-64-ல் நடந்த காங்கேசன்துறை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்கு தோழர் எஸ். கமலதாசன் தலைமைவகித்தார். தோழர் மாலெஸ் சென்ற வருட அறிக்கை சமர்ப்பித்தார்.

காங்கேசன்துறையில் சி. டபிள்யூ. ஈ. நிறுவக் கோரி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் காங்கேசன்துறைக் கிளை நடத்தும் இயக்கத்திற்கு காங்கேசன்துறை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் முழு ஆதரவையும் கொடுப்பதென முடிவு செய்து, சுன்னாகத்தில் சி. டபிள்யூ. ஈ.க்கான கட்டிடம் பலமாதங்களுக்கு முன் எடுக்கப்பட்டு, வாடகை கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் வியாபாரம் இன்னும் ஆரம்பிக்கப் படவில்லை. ஆட்சியினரின் இந்த அலட்சியமான ஊதாரித்தனத்தை காங்- கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன், உடன் அங்கு வியாபாரத்தை ஆரம்பிக்கும்படி ஆட்சியினரை கேட்டுக்கொள்கிறது.

பின் வரும் தோழர்கள் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: வ. தி. செல்வராஜா, உப-தலைவர்: மூ. கணபதிப்பிள்ளை, செயலாளர் சீ. ஸ்ரீகாந்தன், உப-செயலாளர்: சி. பவான், பொருளாளர்: கா. கணபதிப் பிள்ளை. நிர்வாக சபை அங்கத்தவர்கள்: எஸ். கமலதாசன், இ. செல்வராஜா.

★ ★ ★

### எமது அனுதாபம்

''நீண்ட காலம் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவராகவுகம், கட்சிப் பத்திரிகை விற்பதில் முன்னின்று உழைத்தவருமான தோழர் எம். கந்தையா அவர்கள் திருகோணமலை தாசன் கம்பனி கப்பலில் தொழில் புரியும்போது 17-2-64-ல் அகால மரணமடைந்தார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி திருகோணமலைக் கிளையும் ''தொழிலாளி'' நிர்வாகமும் அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

**தொழிலாளி**

# மக்கள் சக்தி மகத்தானது

# திருமதி சுன்யாட்-சன் சொற்பொழிவு

கடந்த 28-2-64-ல், ஹொரணை ஸ்ரீபாலி வித்தியாலயத்தில், மக்கள் சீன உதவி ஜனாதிபதி திருமதி சுங் சிங்-லிங் (திருமதி சுன் யாட்-சன்) நிகழ்த்திய விசேஷ சொற்பொழிவின் முக்கிய பகுதிகளை இங்கு தந்துள்ளோம்

இலங்கையும், சீனாவும் நீண்ட நெடும் தூரத்தால் பிரிக்கப்பட்டுள்ள போதிலும், நம்மிரு நாட்டு சகோதரத்துவ இணைப்பும் பிணைப்பும் பிரிக்க முடியாதவையாகும்.

நிலப்பிரபுத்துவ சிதைவுகளின் மீது, முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் கட்டியெழுப்பிய பழைய உலகம் சிதைந்து அழிந்து வருகிறது. ஆனாலும் அது முற்றாக அழிந்து விட்டதாக எந்த வகையிலும் கூற முடியாது. பழைய அமைப்புகள் அவற்றின் சரித்திரப் பயனையும் கடந்து வாழ்ந்து விட்டன. மனிதகுலத்தின் பிரச்சினைகளின் தீர்வுக்கு பொறுப்பான உத்திரவாதம் தரவோ அல்லது மானிட ஜாதிக்கு வேண்டிய பாதுகாப்பை நல்கவோ அவற்றால் இனி இயலாது! மனிதன், பழைய உலகால் தனக்குத்தர இயலாதவற்றை புதிய உலகிலிருந்துபெற முனைந்துள்ளான். புதிய உலகம் அவைகளைத் தர சக்தி பெற்றது.

மாறுகின்ற இக் கால கட்டத்தின் பிரதான குணம்சம், வெகு ஜனங்கள் அரசியல் விழிப்பு அடைதலேயாகும். தம் மூட நம்பிக்கைகளையும், பழையசமுதாயம் மாற்றப்பட முடியாதது என்ற நிலைபெற்றஎண்ணங்களையும்நீக்கி வருகின்றனர்; போக்க முற்படுகின்றனர்.

புதியதோர் கண்ணோட்டத்தை ஆயுதமாகக் கொண்டு, அடக்கு முறை, சுரண்டல், யுத்தம் ஆகியவற்றின் தோற்றுவாயை வாழ்விலிருந்து அகற்ற அவர்கள் முனைகின்றனர். அரசியல், பொருளாதார, சமூக சமத்துவ அடிப்படையில் மானிட உறவுகளை புதுப் பொலிவுடன் பூத்துக் குலுங்கச் செய்யவும், சமாதான உலகிற்கான பாதையையும் இதில்தான் அவன் காண்கிறான்,

புத்துலகின் எல்லையை எட்டிப் பிடிக்கப் பிரதான தடைக்கல்லாக, முடைக்கல்லாக இருப்பது ஏகாதிபத்தியமே என மக்கள் உணர்கின்றனர். இந்த உணர்வு, உன்னத அரசியல் விழிப்பின் ஒரு முக்கிய அம்சமாகும். பழைய உலகம் அழிவின் திசையில் சென்றுகொண்டிருக்கிறது என்றாலும், அது இன்னும் ஒழிந்து விடவில்லை. இந்த உண்மையை மக்களிடமிருந்து மறைக்க முயல்வோரும் உள்ளனர். ஆனால், ஏகாதிபத்தியம் கூட அவர்களுக்கு இந்தப் பெரும் ஏமாற்றில் உதவுவதில்லை. ஏகாதிபத்தியம் உலகெங்கும் மக்களுக் கெதிராகத் தொடர்ந்து தாக்குதல் செய்வதன் மூலம், தான் இன்னமும் உயிருடன் இருப்பதையும், மனித முன்னேற்றத்தின் மிகக் கொடிய எதிரியாயிருப்பதையும், இன்று உலகில் யுத்தத்தின் ஒரே தோற்றுவாயென்பதையும் எமக்குக் காட்டித் தருகிறது.

மாறுபடும் எமது உலகில் ஒரு புறம் மக்களின் மிகப் பெரும்பான்மையினர்; மறுபுறம் சொற்ப தொகையினரின் ஏகாதிபத்தியம்,இவ்விரு சக்திகளும் ஒன்றுக்கொன்று எதிராக நிற்கின்றன. மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மையிது, இதற்கு என்ன செய்வது? இது தான் இன்றைய கேள்வி!

இதற்குப் பதிலளிக்க ஒருவர் முதலில் மக்களின் பக்கமா, அவர்களின் லௌகீக, ஆத்மீக அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய ஆதரவா, அல்லது இவற்றை மக்களுக்கு இல்லாமற் செய்து, துன்பமும் வறுமையையுமே அவர்களுக்குத் தருபவர்களின் பக்கமா என முடிவு செய்யவேண்டும்.

இதை உண்மைகளின் வழி நின்று தீர்மானிக்கவேண்டும்; பின்னர் அவ்வுண்டைகளைக் கொண்டு செயலாற்றுவதற்குரிய கோட்பாடுகளை வகுத்துக் கொள்ள வேண்டும்.

மக்கள் தங்கள் இலக்கைத் தெளிவாக மனதில் கொண்டு, தம்முள்ளும் தமது சகாக்களுடனும் உறுதியாக- ஐக்கியமுற்று, தங்கள் அடக்குமுறையாளர் மீது வெற்றிப் போர் தொடுக்கின்றனர். இதுவே 20-ம் நூற்றுண்டின் பெரும் பாடம். மக்கள் சாதகமனைத்தும் தமக்கெதிராக உள்ள நிலையில் ஆரம்பிக்கலாம். எல்லாலௌகிக வழிகளிலும் எதிரி மிகுந்த உயர்வு பெற்றிருக்கலாம். ஆனால் எதிரி நாளாந்தம் பலஹீனமுற மக்கள் நாளாந்தம் பலம்பெற்று இறுதியில் வெல்ல முடியும், வெல்கின்றனர்.

இதுவே ருஷ்ய அக்டோபர் புரட்சியையும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களினதும், சியாங் கே-ஷேக் இனதும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளினதும் டாங்கிகளையும் விமானங்களையும் எதிர்த்த சீன மக்களின் சிறு துப்பாக்கிகளும், படிஸ்டா மூர்க்கப் படைகளின் அமெரிக்க ஆயுதப் பலத்தை எதிர்த்த கியூபா வீரர்களின் பனிரண்டு ஆட்களும் ஏழு துப்பாக்கிகளும், எட்டு லட்சம் பிரெஞ்சுத் துருப்புகளை எதிர்த்த ஆயுதங்கள் அதிகமில்லாத அல்ஜீரிய கொரில்லாகளும் எமக்குக் கூறியது. இதுவே அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் அமானுஷ்ய விசேஷ யுத்தத்திற்கு எதிரான தென் வியட்நாமிய மக்கள் படையினரின் அடுத்தடுத்த வெற்றிகள் எமக்குத் தினசரி கூறுவது.

(அடுத்த இதழில் முடியும்)



இரத்மலானை விமான நிலையத்தில் திருமதி சுன்யட்சனை இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வரவேற்கும் காட்சி

# வர்க்கப் பேராட்டத்தை முன்னெடுத்துச்செல்வோம்

## அம்பாறையில் ஐக்கிய தொழிற்சங்க கூட்டம்

அண்மையில் அம்பாறை இ. போ. ச. டிப்போவில் நடைபெற்ற மூன்று தொழிற் சங்கங்களினதும் கூட்டுப் பொதுக் கூட்டம், இ.போ.ச. ஊழியர்களின் ஐக்கியப் போராட்டத்திற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தது.

இக் கூட்டத்தில் அம்பாறை ஐக்கிய தொழிற் சங்கங்களின் செயலாளர் தோழர் ரண்பண்டா உரை நிகழ்த்தும் பொழுது ''தொழிலாளி வர்க்கம் தமது உரிமைகளைப் பெறுவதற்கு சமாதான வழிகளைப் பாவித்து எங்கும் வெற்றி பெற்றதில்லை'' என்றார்.

அவர் மேலும் பேசுகையில்' ''முதலாளித்துவ பாராளுமன்றத்தின் செயல்களில் நம்பிக்கை வைப்பதானது, தொழிலாளி வர்க்கம் தனது வர்க்கப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் செயலாகும். உரிமைகளை வென்றெடுப்பதாகாது'' எனக் குறிப்பிட்டார்.

அகில இலங்கைமோட்டார் தொழிலாளர் சங்க அம்பாரைக் கிளைத் தலைவர் தோழர் ஜே. ஜயசிங்க அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அகில இங்கை மோட்டார் தொழிலாளர் சங்க இணைச் செயலாளர் தோழர் டி. எம். ஜயசிங்க, அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் கூட்டுச் செயலாளர் தோழர் எஸ். ஏ. மார்ட்டினஸ், இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்க அமைப்புச் செயலாளர் தம்மிக்க குணதாஸ, டபிள்யூ. எஸ். டி. சில்வா, டபிள்யூ. ஏ. சந்திரதாஸ, ஏ. ராசையா, கே. வி. கிஷ்ணக்குட்டி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.




# பாக்குத் தோட்டத்தில் வெற்றி

## செங்கொடிச் சங்க சக்தி பெருகுறது

லூனுகலையைச் சேர்ந்த பாக்குத்தோட்டத்தொழிலாளர்கள் செங்கொடிச் சங்கத்தில் (இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம்) சேர்ந்ததற்காக தோட்டத்துரை பல நொண்டிக் காரணங்களைக் கூறி தோழர் மைக்கல் என்பவரை வேலை நீக்கம் செய்தார். பிடிவாதமாக, அடம்பிடித்திருந்த நிர்வாகத்துடன் கடந்த 12-2-64-ந் தேதி லூனுகலை வாடி வீட்டில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தொழிற் கந்தோர் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இப் பேச்சு வார்த்தையால் செங்கொடிச் சங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட பதுளை மாவட்டப் பிரதிநிதி தோழர் எம்.பீ. செல்லையா அவர்கள் தோட்ட நிர்வாகத்துடன் வாதிட்டுத்திரும்பவும்தோழர் மைக்கல் என்பவருக்கு வேலை பெற்றுக் கொடுத்திருக்கிறுர். இனிமேல் ஏற்படும் பிரச்சினை சம்பந்தமாக யூனியனுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்திக் கொள்ளவும் நிர்வாகம் சம்மதித்தது.

இத் தொழிலாளிக்கு வேலை கொடுத்தால் தான் தோட்டத்திலிருக்கப் போவதில்லை என்று சபதம் எடுத்திருந்த அத் தோட்டத்து கண்டாக்கையும் யூனியன் முயற்சியால் மறு டிவிஷனுக்கு மாற்றம் செய்யப் பட்டிருக்கிறது. இவ் வெற்றிகளைக் கண்ட தொழிலாளர்கள் அனைவரும் தொழிலாளருக்கு உண்மையாகவே பாடுபடும் செங்கொடிச் சங்கத்தில் அன்றே சேர்ந்து விட்டார்கள்.

பிரதான தபால் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டது.

தொழிலாளி

# 21 கோரிக்கை......

—1-ம் பக்கத் தொடர்வுப்படி, சேமநிதி, பென்ஷன் ஆகிய எல்லாவற்றிற்கும் வருமான வரியிலிருந்து விதிவிலக்கு.

4. எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஆகக் கூடியதாக 45 மணி நேர வேலை வாரம்.

5. எல்லாத் தொழிலாளர்களுக்கும் போதிய வீட்டுவசதி அல்லது வீட்டு வாடகைப் பணம்.

6. முதலாளிகளினல் வழங்கப்பட்ட வாசஸ்தலங்களில் குடியிருக்கும் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட, தொழிலாளர்களுக்குப் பூரண குடியிருப்பு உரிமைகள்.

7. (அ) ஸ்தல ஸ்தாபன சேவை உட்படத் தனியார் துறையிலுள்ள சகல தொழிலாளர்களுக்கும் 7 நாள் காசுவல் விடுமுறையும், 30 நாள் வைத்திய விடுமுறையும்.

(ஆ) பிரசவ விடுமுறை பிரசவத்திற்கு முன்னர் ஆறு வாரமும் பின்னர் ஆறு வாரமுமாக அதிகரிக்கப்படுதல். கர்ப்ப காலத்தின் கடைசிப் பகுதியிலும் பிரசவத்தைத் தொடர்ந்தும் குறைக்கப்பட்ட வேலை நேரம்.

(இ) அரசாங்க ஸ்தாபனங்களிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் ஸ்தல ஸ்தாபன அலுவலகங்களிலும் அலுவலக லீவு பொது விடுமுறைகளைப் பொறுத்தவரை சனிக்கிழமையை அரை நாளாகக் கணித்தல்.

(ஈ) பொது விடுமுறைகள் ஞாயிற்றுக் கிழமைகளில் வரும்பொழுது அடுத்த நாளை விடுமுறை நாளாகக் கணித்தல்.

(உ) சாப்பு காரியாலய சிப்பந்திகள் சட்டத்துக்குட்பட்ட எல்லா சட்டரீதியான விடுமுறைகளும் தனியார் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கு வழங்கப்படுத்தல்.

(ஊ) ஞாயிற்றுக் கிழமையை எல்லாத் தொழிலாளர்கட்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாளாக்குதல்.

8. ஸ்தல ஸ்தாபன சேவை உட்பட்ட பொதுத்துறை ஊழியர்கள் 6 மாத சேவைக்குப் பின் தற்காலிக ஊழியர்களாகவும் 3 வருட சேவைக்குப்பின் நிரந்தர பென்ஷன் உள்ள ஊழியர்களாகவும் ஆக்கப்படுதல். சம்பள உயர்வு பென்ஷன் ஆகியவற்றிற்கு நிரந்தர சேவைக்கு முற்பட்ட தற்காலிக சேவையையும் கணக்கிடுதல்.

9. (அ) தகுந்த பிரதி வேலையும் முந்திய சேவைக்கான போதிய நஷ்டஈடுமின்றி வேலை நீக்கம் எதுவும் செய்யப்படுத்தல் கூடாது.

(ஆ) வேலையில்லாதவர்களுக்கு வேலை அல்லது தற்காலிக வேலை கொடுத்தல் வேண்டும்.

10. (அ) ஊழியர் சேமநிதிக்கு முதலாளிகளின் கட்டணம் முழு ஊதியத்தின் 10% ஆகக் கூட்டப்படுதல்.

(ஆ) ஊழியர் சேமநிதியில் 10 ஆண்டுகளுக்குக் குறையாது அங்கத்தவராக இருந்ததின் பின் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டாலும் ஊழியருக்கென ஊழியர் சேமநிதியில் இருக்கும் பணத்தையும், ஊழியர் சேமநிதிக்கு மாற்றப்பட்டுள்ள நிதித் தொகைகளையும் எடுப்பதற்கான எந்தவித சிக்கலுமில்லாது சட்டரீதியான வசதி.

(இ) விதவைகள் அநாதைகள் நிதி இரட்டிமடங்காக்குதல்.

11. ஊழியர் சேமநிதி ஆரம்பிக்கும் முன்பாக உள்ள ஒவ்வொரு வருட கடந்த காலச் சேவைக்கும் ஒருமாத முழு ஊதியம் கிராட்டியுட்டி வழங்கப்படுதல்.

12. அரசாங்க கார்ப்பரேஷன் கோர்டுகளுக்கு தொழிலாளர்களிடமிருந்து தெரியப்பட்ட பிரதிநிதிகள் நியமிக்கப்படுதல்.

13. இடமாற்ற உத்தியோக உயர்வு போர்டுகள் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நிறுவப்படுதல்.

14. ஆசிரியர்கள், அரசாங்க கார்ப்பரேஷன் ஊழியர்கள், ஸ்தலஸ்தாபனசேவை ஊழியர்கள் உட்பட்ட எல்லா அரசாங்க ஊழியர்களுக்கும் பூரண தொழிற்சங்க அரசியல் குடியுரிமைகள் வழங்கப்படுதல். தொழிற்சங்க உத்தியோகத்தர்களுக்கு எல்லா தோட்டங்களிலும் பிரவேச உரிமை வழங்குதல்.

15. வேலை நிறுத்தங்களில் பங்கு பற்றியதன் காரணமாகவோ, தொழிற்சங்க வேலைகள் ஆகியவற்றிற்காகவோ நீக்கப்பட்ட அல்லது கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்ட எல்லா பொது ஊழியர்களுக்கும், கார்ப்பரேஷன் ஊழியர்களுக்கும் திரும்ப வேலை கொடுத்தல், அதே காரணங்களுக்காக விதிக்கப்பட்ட எல்லாத் தண்டனைகளும் அகற்றப்படுதல்.

16. காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா கொடுத்த வாக்குறுதியின்படி அரசகரும மொழிச் சட்டத்தையும் தமிழ்மொழி விசேஷ சரத்துச் சட்டத்தையும் அமுல்நடத்தும் பொழுது பழைய ஊழியர்களையும் ஸ்தலஸ்தாபன ஊழியர்களையும் கஷ்டத்திற்குள்ளாக்காத கொள்கையை அனுஷ்டித்தல்.

17. உத்தியோக மொழியில் தேர்ச்சி, தேவையில்லாத கடமைகளில் ஈடுபட்டுள்ள பொது ஊழியர்களுக்குத் தேர்வுப் பரீட்சையிலிருந்து விதிவிலக்கு.

18. (அ) அடிமட்டத்திலிருந்து உயர்மட்டம் வரை உத்தியோக உயர்வு சாத்தியக் கூறுகள், நிர்வாகசேவையில் உயர்மட்ட ஸ்தானங்களில் 50% விகித கீழ்மட்டங்களிலிருந்து நிரப்பப்படத்தகுந்த வழிவகைகள் ஆகியவகொண்ட ஒருமுகப்படுத்தப்பட்ட நிர்வாகசேவை.

(ஆ) தொழில் நுட்பகைத்தொழில்தரங்களில் இருக்கும் தொழிலாளர்கள் தரத்துக்குத்தரம் உயர்வுபெறுவதற்குச்சரியான வாய்ப்புகளுக்கான வசதி.

19. பொது ஸ்தலஸ்தாபன ஊழியர்களின் நம்பிக்கையைப் பெறத்தக்கதாக பொதுசேவைக் கமிஷனையும், ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனையும் புனரமைப்பது. பொதுச்சேவைக் கமிஷன், ஸ்தலஸ்தாபனக் கமிஷன் அகியவற்றின் முந்திய தீர்மானங்களைப் புனராலோசிக்கப் பாராளுமன்றத்தின் ஆணைக்குக்கீழ் ஒரு புனர் விசாரணை சபை நிறுவுவது.

20. தொழிலாளர் நஷ்டஈடு சட்டத்தின் கீழான நஷ்டயீடு விகிதத்தை மும்மடங்காக்குவது, விபத்து நாளிலிருந்து முழு ஊதியம் வழங்குவது.

21. சமமான வேலைகளுக்குச் சமமானசம்பளம்.

(அ) பெண்களுக்கு எதிராக சம்பளத்தில் வித்தியாசம் கூடாது.

(ஆ) ஆசிரியருக்கு இருப்பதுபோல் மொழியை அடிப்படையாக கொண்டுசம்பள வித்தியாசம் கூடாது.

## திரிபுவாதிகள் கோட்டையில்

# தொழிலாளருக்கு அநீதி

### அண்ணன் மார்க்சிஸம்-லெனினிஸம் பரப்பியதற்கு, தம்பிக்கு கல்தா!



தோழர்
ஆர். செம்ஸன்

சீர்குலேவுத் திரிபுவாத மெண்டிஸ் கும்பல்' சென்ற வாரம் தொழிற்சங்க மாநாடு நடத்தியது. ஏன்? தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க!

'தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க மாநாடு நடத்தும் இத் திருக் கூட்டத்தினர் அவர்களுக்குச் சொந்த மானலங்கா பிரஸ் அச்சகத்தில் என்ன செய்கிருர்கள்?

எவ்வித காரணமும் காட்டாமல், திரிபுவாதிகளின். தொழிலாளர் துரோகக் கொள்கையை எதிர்த்த ஒரே குற்றத்திற்காக, அவர்களின் நீண்டகால சேவையும், மகத்தான தொண்டுகளையும் உதறித் தள்ளிவிட்டு தோழர்கள் அ. ராமநாதன், ஜெயசோம விஜயத்திலக்க, வில்பட் ஆகிய அச்சுத் தொழிலாளர்களை வெளியேற்றினர். 24 மணி நேர அறிவித்தலில் இவர்களை வெளியேற்றிய ''தொழிலாளர்களைப் பாதுகாக்க இன்று கூச்சல் போடும்'' இக் கும்பல், அத் தொழிலாளர்களை எவ்விதக் காரணமும் காட்டாதது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதைத் தொடர்ந்து இவர்கள் 'தேசாபிமானி'யில் அச்சுக் கோர்த்த தோழர் ஆர். வி. துரைரத்தினத்தையும் வெளியேற்றினர்.

தோழர் துரைரத்தினத்தை வெளியேற்ற இவர்கள் தந்த காரணம், அவரின் அண்ணன் தோழர் நீர்வை பொன்னையன், உண்மையான மார்க்ஸிஸ-லெனினிஸக் கொள்கையை யாழ்-பிரதேசத்தில் பரப்பியதாகும்.

தோழர் துரைரத்தினத்தை அநியாயமாகவும், அக்கிரமமாகவும் நீக்கிய ''தொழிலாளர்களைப் பாதுகாப்பதாகக் கூச்சல் போடும்'' திரிபுவாதக் கும்பலின், செயலைக் கண்டித்து 'தேசாபிமானி'யின் அச்சகப் பொறுபாளராகக் கடமையாற்றிய தோழர் ஆர். செம்ஸன் அண்மையில் தனது வேலையிலிருந்து ராஜிஞமாச் செய்தார்.

சீர்குலேவு மெண்டிஸ் கும்பலுக்குக் கண்டனம் தெரிவித்து ராஜிஞமாச் செய்த தோழர் செம்ஸன், ''திரிபுவாத கெனமன்—மெண்டிஸ் கும்பலின் தொழிலாளர் துரோகங்கள், கழுத்தறுப்புக்கள் சீக்கிரமே பரிபூரணமாக அம்பலத்திற்கு வரும் என்று கூறினர்.

## 21 கோரிக்கைகளுக்கு எமது ஆதரவு
## சி. டி. யூ. எப். ஊர்வலம்

21கோரிக்கைகளுக்கு ஆதரவாகஎதிர்வரும், 21-ந் தேதி, கொழும்பில் பிரமாண்ட ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெறும்.

சி. டி. யூ. எப். ஊர்வலம் 21-[illegible]-64, சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் கும்பனித் தெரு டிமெல் பார்க்கிலிருந்து ஆரம்பமாகும்.

தொழிற்சங்கத் தோழர்கள் அனைவரும் குறித்த வேளைக்கு முன்னதாக, டிமெல் பார்க் வந்து சேரும்படி அழைக்கிறோம்.

# அனுராதபுரியில் வாலிபர்கள் புரட்சி மாநாடு

சென்ற மாதம் 21, 22, 23ம் திகதிகளில் அனுராதபுரியில் இலங்கை வாலிபர்களின் அதி சிறந்த, 300க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டமுக்கியம் மிக்கதோர் கருத்தரங்கம் நடைபெற்றது. ஈழத்து வாலிபர்களின் இணையற்ற ஸ்தாபனமாகிய இலங்கைக் கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனம் முன் நின்று ஒழுங்குபடுத்திய இக் கருத்தரங்கத்தில் நாட்டின் நாலா பக்கத்திலிருந்து 100க்கு மேற்பட்ட வாலிபர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

இவ் வெற்றி மாநாட்டுக்கு வாலிபப்படையின் தலைவர்களான தோழர்கள் எம். பி. அமரபால, என். எல், பெரேரா, கே. ஏ, சுப்பிரமணியம், எம். பதுர்தீன், எஸ், தேவப்ரிய ரணசிங்க ஆகியோர் தலைமை வகித்தனர்.

21ம் திகதி ஆரம்பித்த இம் மாநாட்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உதவித் தேசிய அமைப்பாளரும் கொழும்பு மாவட்டச் செயலாளருமான தோழர் டி. கே. டி, ஜினேந்திரபால ''இலங்கையில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம்'' என்னும் பொருளில் நீண்டதோர் உரை நிகழ்த்திஞர். அதைத் தொடர்ந்து நமது நாட்டின் பலபகுதிகளிலும் வாலிபத் தோழர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியில் எம் முறையில் செயல்படவேண்டும் என்பது பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றது,

அடுத்த நாள் காலையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் என். சண்முகதாசன் ''சர்வதேசியப்பிரச்சினைகள்'' என்னும் பொருள் பற்றிப் பேசினர். பின்னர் மாலையில் வாலிபர் சம்மேளனத்தின் மத்தியகமிட்டி உறுப்பினரும் சபைத் தலைவருமான தோழர் என். எல். பெரேரா ''அநுரதபுரத்தின் சரித்திரம்'' என்பது பற்றிப்பேசினர்.

அதன் பின் 23-ம் திகதி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரேமலால் குமாசிரி ''புதிய ஜனநாயகப் புரட்சியில் வாலிபர்கள் கடமை'' என்ற சொற்பொழிவாற்றி வாலிபர்களின் புரட்சிகர உணர்வுக்குப் புத்துயிரூட்டினர். அவர் சர்வதேசிய ரீதியாக சுதந்திர வாழ்வில் சுபீட்சம் காணப் போராடும் மக்களின் வீரகாவியங்களை விளக்கி, அதே போன்று எமது நாட்டிற்கும் புரட்சி அவசியம், அது நெருங்கி விட்டது எனவும், அத்தகைய போராட்டங்களுக்கு நம்மை நாம் தயார் செய்து கொள்ள வேண்டும் எனவும் கூறினர்.

மாநாட்டு முடிவில் சம்மேளனப் பொதுக் காரியதரிசி டபிள்யூ. ஏ. தர்மதாஸ, மாநாட்டு அறிக்கையையும், 4-வது தேசிய சம்மேளனத்தின் வேலைத்திட்டத்தையும் சமர்பித்து உணர்ச்சிகர உரையாற்றினர்.

இம் மாநாட்டில் கலந்து கொண்ட தோழர்கள் புரட்சி மணம் வீசும், புதுமைக் கருத்துக்களை கொண்ட பாடல்கள் பாடி மாநாட்டை புதுமணங் கமழச் செய்ததும், ''புரட்சிக் கீதம்'' பாடியதும், புரட்சிச் சபதம் பூண்டு புதுமைக் கோஷங்களை எழுப்பியதும் குறிப்பிடத் தக்கது. முடிவில் மாநாட்டு மண்டபத்திலிருந்து அனுராதபுர நகர்வரை ஊர்வலத்தில் வாலிபர்கள் சென்றது நகர மக்கள் மத்தியில் பெரும் உற்சாகத்தை ஊட்டியது.

இக் கருத்தரங்கம், கலந்து கொண்ட வாலிபர்களின் எதிர்கால சேவைக்குப் பெரும் பயனளிக்கும் தன்மையில் நடைபெற்றது பாராட்டற்குரியது.

தொகுப்பு: எம். ஐ. எம். அன்வர்

# வெடி குண்டு

கடந்த திங்கட்கிழமை சி. டி. யூ. எப். கட்டிடத்தின் கூரையில் ஒரு வெடிகுண்டு வெடித்து, இரு பையன்கள் சேதத்துக் குள்ளாகியுள்ளனர்.

இதுபற்றி சி. டி. யூ. எப். உத்தியோகஸ்தர்கள் போலிஸுக்கு அறிவித்தனர். போலீசார் வந்து பரிசீலனை செய்த போது, மற்றும் சில குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன.

இதுபற்றி போலிஸ் புலன் விசாரணை செய்து வருகிறது.

பதிப்பித்து வெளியிடுபவர்: அசன் மொகிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 9, டிமெல் வீதி கொழும்பு-2.